# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1894/27 - 2014 දෙසැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2014.12.26

*1894/27 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

எனது இலக்கம் : 01/10/03/04.

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபை சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண ஆளுநர் சீ. நந்த மெத்தியு ஆகிய எனக்கு, வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. இலங்கை பொறியியல் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. கே. ஏ. பீ. செனெவிரத்ன அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, 2014.09.09 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண பிரதி தலைமைச் செயலாளர் (பொறியியல் சேவை) பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

2. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. கே. எம். திசாநாயக அவர்கள், 2014.11.03 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும், கல்வி, மாகாண உள்ளூராட்சி, காணி, கலாசாரம், சமூக நலன்புரி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான அமைச்சின் பிரதிப் பணிப்பாளராக (கல்வி).

3. ஊவா மாகாண விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை வளர்ப்பு, நன்நீர் மீன்பிடி கைத்தொழில், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சின் செயலாளர் திரு. குணதாச சமரசிங்க அவர்கள் சுகயீனமுற்றிருப்பதால் 2014.11.10 ஆந் திகதி முதல் அவர் மீள சேவைக்கு திரும்பும் வரை இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜீ. கே. எஸ். எல். ராஜதாச அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை வளர்ப்பு, நன்நீர் மீன்பிடி கைத்தொழில், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சின் செயலாளராக பதிற்கடமை ஆற்றுவதற்கு.

4. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். நிமல் வீரசிங்க அவர்கள், 2014.11.03 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2015.11.02 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் வியலுவ வலயக் கல்வி காரியாலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள பணியாற்றுவதற்கு.

5. ஊவா மாகாண பிரதி தலைமைச் செயலாளர் (நிர்வாகம்) திருமதி ஆர். எம். எஸ். டி. ரத்நாயக அவர்கள், 2014.10.18 ஆந் திகதி முதல் 2014.11.01 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2014.10.18 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜீ. கே. எஸ். எல். ராஜதாச அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளராக (நிர்வாகம்) பதிற்கடமையாற்றுவதற்கு.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

6. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண வீடு ஆணையாளராக பதிற்கடமை ஆற்றுவதற்கு.

7. இலங்கை பொறியியல் சேவையைச் சாராத பொறியியல் சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. எஸ். டி. தென்னகோன் அவர்கள், 2014.11.04 ஆந் திகதி முதல் ஊவா மாகாண பொறிமுறை பணிப்பாளராக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2015.11.03 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண பொறிமுறை பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் மீளப் பணியாற்றுவதற்கு.

8. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. ரன்தெனிய அவர்கள், 2014.11.10 ஆந் திகதி முதல் உடனடியாக செயற்படும் வகையில் பதுளை மாநகர சபையின் மாநகர சபை ஆணையாளராக.

9. ஊவா மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்நடத்தையும் சிறுவர் பாதுகாப்பும் மற்றும் மகளிர் விவகாரம் தொடர்பான அமைச்சின் செயலாளர், திரு. எல். எல். அனில் விஜேசிரி அவர்கள், 2014.11.21 ஆந் திகதி முதல் 2014.11.26 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2014.11.21 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்நடத்தையும் சிறுவர் பாதுகாப்பும் மற்றும் மகளிர் விவகாரம் தொடர்பான அமைச்சின் செயலாளராக பதிற்கடமையாற்றுவதற்கு.

10. ஊவா மாகாண கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதார சேவை திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (ஊவா) வைத்தியர் ஆர். எம். ஆரியதாச அவர்கள், 2014.11.29 ஆந் திகதி முதல் 2014.12.06 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2014.11.29 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை இலங்கை கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதார சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர், மிருக வைத்தியர் என். ஜீ. சீ. வை. த சில்வா அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதார சேவை திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (ஊவா) பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

11. ஊவா மாகாண விவசாய திணைக்களத்தின் மாகாண விவசாய பணிப்பாளர் (ஊவா) திரு. ஆர். எம். நந்தசிரி அவர்கள், 2014.11.29 ஆந் திகதி முதல் 2014.12.06 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2014.11.29 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை இலங்கை கமத்தொழில் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எச். கே. பீ. ஜயலத் அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தின் மாகாண விவசாயப் பணிப்பாளர் (ஊவா) பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

சீ. நந்த மெத்தியு,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
2014, திசெம்பர் 22.

01 - 350

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.